
உள்ளூராட்சி சபைத் தேர்தல்:

# ஐ.ம.சு.மு. கொழும்பு மாநகர சபை முதல்வர் வேட்பாளராக மிலிந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கை தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மிலிந்த மொரகொட உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதல்வர் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் கட்சியின் விசேட சந்திப்பின் போது இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

அத்துடன் மிலிந்த மொரகொட கொழும்பு மாநகர சபைக்கான உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் அணியின் தலைவராகவும் செயற்படவுள்ளார். முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட பல அமைச்சுப் பதவிகளை வகித்த சிரேஷ்ட அரசியல்வாதியும், சிறந்த ராஜதந்திரியுமாவார். இவர் பல ஜனாதிபதி மற்றும் பிரதமர்களின் முக்கிய ஆலோசகராகச் செயற்பட்டவர்.